# ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கே மெட்ரோ ரயில் சேவை தொடக்கம்



சென்னை நவ 11-

இனி ஞாயிறுகளிலும் காலை 6 மணி முதல் மெட்ரோ சேவை வழங்கப்படுகிறது. இது குறித்து சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் நேற்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

சென்னையில் இனி அனைத்து ஞாயிற்றுக் கிழமை களிலும் மெட்ரோ ரயில் சேவை காலை 6 மணிக்கே தொடங்கி இரவு 11 மணி வரையில் இருக்கும். இந்த புதிய முறை நேற்று முதல் அமலுக்கு வந்தது. 2 வழித்தடங்களிலும் 7 நிமிட இடைவெளியில் மெட்ரோ ரயில்கள் இயக்கப்படும். ஏற்கனவே, அனைத்து ஞாயிற்றுக்கிழமைகளிலும் மெட்ரோ ரயில் சேவை காலை 8 மணிக்கு தொடங்கியது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.